## பிரிவு – 8

## சாத்தியமான இடங்களில் குடிமைப் பணிகளைத் தனியார் மயமாக்கல்

**3.8.1.** பொது அமைப்புகளின்திருப்தியற்ற செயல்பாடு, இத்தகைய திட்டங்களுக்கான வாலாயமான நிதி ஆதாரங்கள் குறைந்து கொண்டே வருவது ஆகியவையே, அடிப்படை வசதிகளை தனியார் மயமாக்கும் போக்குக்கு காரணங்களாக அமைகின்றன. தனியார் மயமாக்கலின் காரணமாக, நிதி அங்காடிகளில் (Financial Markets) பல புதிய மாறுதல்கள், திட்டங்கள், திட்டப் பணிகள் ஆகியவை உருவாவதால், அரசு முதலீடுகளைப் படிப்படியாகத் திரும்பப் பெறும் நடைமுறையுடன் கூட நேரடியாகவே தனியார் மயமாக்கலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதற்கும் அரசின் ஆதரவு பெருகி வருகிறது.

**3.8.2.** கடந்த சில ஆண்டுகளாக, தனியார் மயமாக்கலின்பால் கவனம் திரும்பி வருவது அதிகரித்திருந்தாலும், இக்கோட்பாடு ஒன்றும் புதுமையானதோ தனித்துவம் வாய்ந்ததோ அல்ல. மேல்நாடுகளில், வரிவசூல், கடிதப் போக்குவரத்து போன்ற அரசுப் பணிகளைக் கூட தனியார் ஒப்பந்தக்காரர்கள் செய்து வருகிறார்கள். இந்தியாவில் கூட, வீட்டு வசதி மற்றும் இதர ஏனைய பணிகளில் தனியார் துறை பெருமளவில் ஈடுபட்டு வருகிறது. ஆனால், பொதுப்பணிகள் அனைத்தையும தனியார் மயமாக்கிவிடலாம் என்று கருதுவதும் எதிர்பார்ப்பதும் தவறு. ஏற்கெனவே தனியார் மயமாக்கப்பட்டுள்ள பணிகளை ஆராய்ந்து பார்த்தோமானால், ஓகோவெனப் பேசப்பட்ட பல அனுகூலங்கள் இன்னும் கிட்டவேயில்லை என்பதைக் காணலாம். கட்டண நிர்ணயமும், ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்ற வசதிகளுக்குரிய கட்டணத்தைச் செலுத்தத் தயாராக இருக்கும் மனப் பாங்குமே தனியார் மயமாக்கலின் முக்கிய காரணி எனலாம். அரசு கட்டண வீதங்களை முறையாகத் திருத்தியிருந்தால், தனியார் மயமாக்குவதற்கான தேவையே எழுந்திருக்காது.

**3.8.3.** அடிப்படை வசதிகளைத் தனியார் மயமாக்குவது தொடர்பாக நிறுவுதல், இயக்குதல், மாற்றுதல் (BOT); நிறுவுதல், சொந்தமாக்குதல், இயக்குதல் (BOO); நிறுவுதல், சொந்தமாக்குதல், இயக்குதல், மாற்றுதல் (BOOT) ஆகிய கோட்பாடுகள் நடைமுறையில் பின்பற்றப்படுகின்றன. இவையெல்லாம், பொதுவாக ஒரு பணியை ஆற்றுவதற்காக, தனி நபர்கள் பொது அதிகார மன்றத்திடமிருந்து சொத்துக்களைக் குத்தகைக்கு எடுக்கின்றபோது அளிக்கப்படுகின்ற புதுத் திட்டங்கள் குறித்த சலுகைகளைக் குறிப்பனவாகும். நிறுவுதல், இயக்குதல், மாற்றுதல் என்பது தனியார் தரப்பினர், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு வசதியை அளிப்பதற்கு நிதியுதவி அளித்து, அவ்வசதியை நிறுவி, இயக்கி, பராமரித்து ஒப்புக் கொள்ளப்பட்ட காலத்திற்குப் பின்னர் அதனை அரசுக்கு மாற்றிக் கொடுக்க இசைவதாகும். இரண்டாவதாகக் குறிப்பிடப்படும் சலுகை, இயக்குபவர், ஒரு வசதியை நிறுவி, சொந்தமாக்கி, இயக்க வகை செய்கிறது. இது போன்றே, ஒரு வசதியை நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி, மாற்றுவது மற்றொரு அம்சமாகும்.

**3.8.4.** அடிப்படை வசதிகளை அளிப்பதற்காக தனிப்பட்ட முறையில் நிதி ஆதாரங்களைத் திரட்டுவது சாத்தியமானதே. ஆனால், இது முதலீட்டாளரின் தேவைகளை நிறைவு செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். இத்தகைய தனியார் முதலீடுகள் சிறந்த, திறமையான பணிகளை அளிக்க முடியும். ஏனெனில், சம பங்கு பத்திரங்கள், நிறுவனத்திலேயே திரட்டப்படும் நிதி ஆதாரங்கள், இடர் மதிப்பீடு (அந்நியச் செலாவணி முறைப்படுத்தல், அரசியல் தலையீடு) செலவு கோட்பாடு, ஆகியவற்றைப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்கள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்துகின்றன. இத்தகைய திட்டங்களுக்கான கடன், தனியார் நிறுவனங்கள் (அரசு உத்திரவாதத்துடன்) வணிக ரீதியில் கடன் அளிப்பவர்கள், ஆகியவர்களிடமிருந்து கிடைப்பதோடு

இடையீட்டாளர் மூலமாக வெளியாரிடமிருந்தும் உதவி பெறப்படுகின்றன. தனியார் மயமாக்கல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நாடுகளில், அடிப்படை வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடும் மூலதன அங்காடியும் இணையாக வளர்ச்சியடைவதைக் காண்கிறோம்.

3.8.5. பின்வரும் வகைகளில் அரசு நிறுவனங்களைவிட தனியார் நிறுவனங்கள் அனுகூலங்களைப் பெற்றுள்ளன.

- குறைவான உற்பத்திச் செலவு, அளிப்பதற்காகும் செலவு ஆகியவற்றின் காரணமாக போட்டி அங்காடியில் வெற்றிகரமாக இயங்க முடிகிறது.
- பணிகளில் அதிகத் திறமை.
- நவீன தொழில் நுட்ப உத்திகளைப் பின்பற்றுவது.
- மூலதன சாதனங்களைப் பெற்று பராமரிப்பதில் திறமை.
- பணிகள் அளிப்பதில் பரந்த தேர்வுரிமையும், நீக்குப் போக்கான தன்மையும்.
- முடிவு எடுக்கும் திறமை.
- ஊதியங்கள், இயக்கச் செலவு, கடன்பணி, முதலீடு ஆகிய வகைகளில் அரசுக்கு குறைவான நிதிப் பொறுப்பு.
- பணி, வாடகைக்கு அமர்த்தும் நடைமுறைகளில் குறைவான கட்டுப்பாடுகள்.
- மாறிவரும் தேவைக்கேற்ப பணி வகைகள், அளவுகள் ஆகியவற்றை சரிக்கட்டுவதில் அதிக நீக்குப் போக்குத் தன்மை.

3.8.6. நீர்வழங்கலைத் தனியார் மயமாக்கியதில் பம்பாய் மாநகர–தொழில் வளர்ச்சிக் கழகத்தின் அனுபவமும், நீரேற்று நிலைய பராமரிப்பில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்–கழிவு நீரகற்றல் வாரியத்தின் அனுபவமும், திடக்கழிவு சேகரிப்பதை தனியார் மயமாக்கியதில், சென்னை பம்பாய் மாநகராட்சிகளின் அனுபவங்களும் வெற்றிகரமான எடுத்துக்காட்டுகளாகும். அவற்றை அப்படியே பின்பற்றுவது கடினமாகும். ஆனால் இதிலிருந்து வெளிப்படும் தனியார் மயமாக்கல் கொள்கை புரிந்துகொள்ளத் தக்கதாகவும் தெளிவாகவும் உள்ளது. தனியார் மயமாக்குவதற்கான அடிப்படை வசதிகளின் சில சாத்தியக் கூறுகள் வருமாறு:

**நீர்வழங்கு அமைப்புகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நீரேற்று நிலையங்கள் ஆகியவற்றின் பராமரிப்பு:**

3.8.7. நீர்வழங்கு அமைப்புகளின் பராமரிப்பு, தனியார் மயமாக்குவதற்கு ஏற்ற பணியாகும். நீர் ஆதாரங்களை உருவாக்கி, நீரை நீர்த் தேக்கங்களுக்கு அனுப்பும்வரை உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்பாக இருக்கலாம். அதற்குப் பின்னர், வீடுகளுக்கு நீர்வழங்கும் பணியை தனியார் முகவரமைப்புகள் மேற்கொள்ளலாம். மாநகர–தொழில் வளர்ச்சிக் கழகத்தைப் பொறுத்தவரையில, குழாய்த் தொடர் நீரேற்று நிலையங்கள் ஆகியவற்றைப் பழுது பார்த்து, பராமரித்தல்,

குளோரின் ஊட்டுதல், தண்ணீர் வரி பட்டியல்கள் தயாரித்தல் போன்ற அனைத்துப் பணிகளும் தனியார் ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இக்கழகம், பெருநகர குடிநீர் வழங்கல்–கழிவு நீரகற்றல் வாரியத்திடமிருந்து மொத்தமாகக் குடிநீரை வாங்கி, அதை நேரடியாக அனுப்பும் பணியைச் செய்கிறது. ஆனால், இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகள், வசூல் ஆகியவை தனியார் மயமாக்கப்பட்டுள்ளன. இக்கழகம், பழுதுபார்ப்பு, பராமரிப்பு, நீரேற்று நிலைய இயக்கம்–பராமரிப்பு, பட்டிகள் தயாரித்தல், தொகை வசூல் ஆகியவற்றையும் தனியார் மயமாக்கியுள்ளது. இதனால் 25 முதல் 30 சதவீதம் வரை செலவு மிச்சமாகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல்–கழிவு நீரகற்றல் வாரியத்தைப் பொறுத்தமட்டில், இவ்வாரியம், 22 தலைப் பணிகள் (Head Works), அண்ணா நகரில் 22 கிணறுகள் ஆகியவற்றின் இயக்கம்–பராமரிப்பைத் தனியார் மயமாக்கியுள்ளது. துளைக் கிணறுகள் வகையிலான இயக்க பராமரிப்புக்கு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியத்திற்கு தோராயமாக ரூ.22 இலட்சம் செலவாகிறது. ஆனால் தனியாரிடமிருந்து வரப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளில் குறிப்பிடப்பட்ட தொகை 22 முதல் 40% வரை குறைவாக இருந்தது. நீர் வழங்கல், குழாய்த் தொடர் பராமரிப்புப் பணிகளைப் போன்றே, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், நீரேற்று நிலையங்கள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பணிகளுக்கான ஆண்டு ஒப்பந்தம், மிகக் குறைவாகத் தொகை குறிப்பிட்டிருந்த ஒப்பந்தப்புள்ளிதாரர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. பம்பாய் மாநகர தொழில் வளர்ச்சிக் கழகமும், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல்–கழிவு நீரகற்று வாரியமும்இப்பணிகளைத் தனியார் மயமாக்கியுள்ளன. இதனால் பணிகள் சிறப்பாக நடைபெறுவதோடு செலவும் 40% குறைந்துள்ளது.

திடக்கழிவு சேகரிப்பு மற்றும் வகை செய்தல் (Disposal):

**3.8.8.** தெருக்களைப் பெருக்குதல், கட்டுமான இடிபாடுகளை அகற்றுதல், குப்பைக் கூளங்கள் சேகரிப்பு, அங்காடிகள், வணிக வளாகங்கள் முதலியவற்றைச் சுத்தப்படுத்தல் போன்ற முக்கியமான பராமரிப்புப் பணிகள் தனியார் துறையிடம் ஒப்படைக்கப்படலாம். இதனை வகை செய்யும் பணி, மண்ணிட்டு நிரப்பும் சாதாரண முறையிலானதாக இருப்பின் இதனையும் ஒப்பந்தக் காரர்களிடம் விட்டுவிடலாம். நகரம் முழுவதையும் பகுதி பகுதியாகப் பிரித்து, சுமார் 25,000 மக்கள் தொகை கொண்ட பகுதியை ஒரு ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கலாம். அவர், நாளொன்றுக்கு 25 அல்லது 30 இடங்களிலிருந்து 10–15 டன் குப்பைகளை சேகரிக்கவும், நாளொன்றுக்கு 8–10 கி.மீ. நீளமுள்ள சாலையை சுத்தப்படுத்தவும் ஏற்பாடு செய்வார். எனினும், ஒப்பந்தக்காரர் செய்த பணி பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும். திடக்கழிவை வகை செய்வதற்குப் பொறுப்பான துப்புரவு ஆய்வாளர் அல்லது ஏனைய அதிகாரி, ஒப்பந்தக் காரரின் பணியை குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மேற்பார்வை செய்யவேண்டும். திடக் கழிவை சேகரிப்பதில் சென்னை மாநகராட்சிக்குக் கிடைத்த அனுபவம், தனியார் அமைப்புகள் ஆற்றும் பணி, பொது மக்களையும் இதில் பங்கு கொள்ளத்தூண்டுவதுடன் குப்பை சேகரிப்புத் திறனும் அதிகரிக்கிறது என்பதைக் காட்டுகிறது. 'எக்ஸ்னோரா' அமைப்பின் பணி பற்றி சென்னைநகரவாசிகள் அறிவர். இந் நிறுவனம், இப்பணிக்காக மாதமொன்றுக்கு ரூ.20/– வசூலிக்கிறது. இக் குப்பைகள் மாநகராட்சி குப்பை அகற்றும் இடங்களில் கொட்டப்படுகின்றன. மும்பையிலுள்ள மாநகர தொழில் வளர்ச்சிக் கழகத்தின் நேர்விலும் கூட, இந்தப் பணியை அந்நிறுவனம், சொந்தமாகச் செய்திருந்தால் ஆகியிருக்கக்கூடிய செலவைவிட தனியார் அமைப்புகளிடம் ஒப்படைத்ததன் மூலம் ஏற்பட்ட செலவு மிகவும் குறைவாகவே இருக்கும் என்பதை அனுபவம் உணர்த்துகிறது.

**பணிக்கட்டணங்கள் வசூலித்தல்:**

**3.8.9.** பணிக் கட்டணங்களையும், வரிகளையும் வசூலிப்பது தனியார் மயமாக்கப்பட வேண்டுமா என்பது விவாதத்திற்குரிய பிரச்சினையாக உள்ளது. முதலில் வசூல் திறன் அதிகரித்தாலும், பின்னர் இது பொது மக்களுக்கு தொல்லையளிப்பதாகவே இருந்தது என்று பம்பாய் மாநகராட்சியின அனுபவங்கள் நமக்கு உணர்த்துகின்றன. எனினும் மாநகர தொழில் வளர்ச்சிக் கழகம் பிரபல அரசு சாரா அமைப்புகள், முதிர்ந்தோர் சங்கம், அரிமா சங்கம் போன்ற சமூக அமைப்புகள் ஆகியவற்றிடம் இந்தப் பணியை ஒப்படைத்து, அவற்றுக்கு அலுவலகம் அமைத்துக் கொள்ள இடமும் ஒரு சதவீதத் தொகையை அவர்களே வைத்துக் கொள்ளவும் அனுமதித்தது. இதனால் வசூல் அதிகரித்ததோடு, பொது மக்கள் தொகைகளைச் செலுத்துவதற்கான நேரமும் அனுசரித்து நிர்ணயிக்கப்பட்டது. குறைவான வசூல் நிலைமையில் கூட மொத்த வசூலில் குறைந்தது 2.5% தொகையை இக்கழகம் செலவு செய்திருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**பூங்காக்கள், தோட்டங்கள் ஆகியவற்றை ஏற்படுத்திப் பராமரித்தல்:**

**3.8.10** தொழில் நிறுவனங்கள், அரசுசாரா அமைப்புகள் ஆகியவற்றுக்கு அளிக்கப்படும் விளம்பர உரிமைகளுக்குப் பதிலாக பூங்காக்கள், தோட்டங்கள், சாலைத் திட்டுகள், மாநகரைச் சுற்றியுள்ள ஏனைய பசுமைப் பகுதிகள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைப்பது நிருவாகத்தின் நடைமுறையாக இருந்து வந்துள்ளது. பூங்காக்கள், தோட்டங்கள் ஆகியவற்றைப் பராமரிப்பதற்கு பகிரங்க ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதன் மூலம் மாநகர தொழில் வளர்ச்சிக் கழகம் இம்முறையை மேலும் சீரமைத்துள்ளது. நிர்ணயித்த எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் கொண்டு செய்ய வேண்டிய பராமரிப்புப் பணியின் அளவு, மேற்கொள்ளவேண்டிய பணி இனங்கள் ஆகியவற்றை இக் கழகம் வரையுறுத்துகிறது. இதற்குப் பதிலாக, ஒப்பந்தக்காரர் விளம்பரத்திற்காக இந்த இடத்தை குத்தகைக்குவிட அனுமதிக்கப்படலாம்.

**தெரு விளக்குகளையும் சாலைகளையும் பராமரித்தல்:**

**3.8.11** உள்ளூர் மக்களின் தேவைகளை உணர்ந்து சிறந்த முறையில் பணிகளை நிறைவேற்றக்கூடிய சிறு உள்ளூர் ஒப்பந்தக் காரர்கள், சொத்தின் மதிப்பில் பொதுவாக 2.5 – 3 சதவீதத்திற்கு மேற்படாத செலவில் 1000–1200 தெரு விளக்குகளைப் பராமரிப்பதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றனர். ஒப்பந்தங்களில், தெரு விளக்குகள் தொடர்பான இயக்க–பராமரிப்புப் பணிகள், சிறு பழுது பார்ப்புப் பணிகள் ஆகியவை அடங்கும். பொதுவாக எந்த ஒரு சமயத்திலும் ஒரு பகுதியில் உள்ள மொத்தத் தெருவிளக்குகளில் 5 சதவீதத்திற்கு மேற்பட்ட விளக்குகள் பழுதடைந்த நிலையில் இருக்கக் கூடாது என்றும் அவ்வாறு பழுதடைந்திருப்பின் அபராதம் விதிக்கப்படும் என்றும் ஒரு நிபந்தனை விதிக்கப்படுகிறது. விளம்பர உரிமைகள் தனியாரிடம் அளிக்கப்படுமானால் பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றின் பேருந்து வழித்தட சாலைகளில் இயக்கப் பராமரிப்புப் பணி மேற்கொள்வது சாத்தியமாகும்.

**3.8.12.** பல்வேறு பணிகளை அளிப்பதில் தனியார் பங்கு பெறுவதில் பல வெளிப்படையான அனுகூலங்கள் உள்ளன என்றாலும் எதிர்ப்புகளும் பல வழிகளில் எழுகின்றன. இச்சமூகப் பணிகளை அரசு அளிக்க வேண்டும் என்றும் வணிக நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் வலுவானதொரு கருத்து நிலவுகிறது. அரசுப் பணிகளை இழக்க நேரிடுமோ என்று தொழிற் சங்கங்களும், மானிய உதவி பெறும் இப்பணிகள் குறித்த செலவு அதிகரிக்குமோ என்று அமைப்பு ரீதியிலான நுகர்வோர் குழுக்களும் அஞ்சுகின்றன. இருப்பினும் 15 – 22% வரை இருந்த நிருவாகச் செலவு, கணிசமாகக் குறைந்த 1.5 முதல் 2 சதவீதம் என்ற அளவுக்கு இறங்கியுள்ளது என்று

மாநகர தொழில் வளர்ச்சிக் கழகத்தின் அனுபவம் உணர்த்துகிறது. தவிரவும் இதனால் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு செம்மையான சிறந்த பணிகளுக்காக பல்வேறு இயக்க நிருவாகத்தில் பொது மக்கள் பங்கேற்பும் அதிகரித்துள்ளது. குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல் வடிகால் வசதிகள், தொழிற்சாலைக் கழிவு சுத்திகரிப்பு முறை, மாநகரச் சாலைகளை மேம்படுத்தல் ஆகியவை அடங்கிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.589 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, நிறுவுதல், இயக்குதல், மாற்றுதல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு நிறுவனத்தால் நிருவகிக்கப்படும். இத்திட்டத்திற்கு ரூ.426 கோடி கடனாகவும் ரூ.163 கோடி சம பங்குத் தொகையாகவும் அளிக்கப்படும். முதலீட்டுச் செலவை வசூலிக்க கூட்டுவரி விதிக்க உத்தேசிக்கப்படுகிறது.

**3.8.13.** சில இடங்களில் கிடைத்த அனுபவம், வெற்றி ஆகியவற்றின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்ட பின்வரும் பணிகளை தனியார் மயமாக்க முயற்சி எடுக்கப்படலாம் என மாநிலநிதி ஆணையம் கருதுகிறது:

- சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி, ஈரோடு, திருப்பூர் போன்ற பெரிய நகர்ப்பகுதி மையங்கள் அனைத்திலும் குப்பைகளை சேகரித்து, குப்பைத் தொட்டிகளில் கொட்டும் பணிகளில் சமுதாயக் குழுக்கள் ஈடுபடுத்தப்படலாம்.

- சென்னைப் பெருநகர பகுதியிலும் பெரிய நகர்ப்புற கூட்டுப்பகுதிகளிலும் கழிவுகளை ஒருவகை செய்வதற்காக வட்டார கழிவு நிருவாக முகவரமைப்பு ஏற்படுத்தப் படலாம்.

- சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி, ஈரோடு, திருப்பூர் போன்ற பெரிய நகர்ப்பகுதிகளிலும் வணிக மையங்களிலும் விளக்குக் கம்பங்களில் விளம்பரம் செய்ய உரிமை அளிப்பதன் மூலம் அல்லது தெரு விளக்குகளைப் பராமரிப்பதற்கு ஒப்பந்த முறைகளை அறிமுகம் செய்தல், முதன்மை சாலைகள், தெருவிளக்குகள் ஆகியவற்றைப் பராமரித்தல்.

- தனியார் ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு நீரேற்று நிலையத்தையும், அனுப்புகை முறையையும் (Transmission System) பராமரித்தல் – கழிவு நீரகற்று நிலையத்தில் கழிவு நீரகற்று பணியை சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல்– கழிவு நீரகற்று வாரியம் ஏற்கெனவே தனியார் மயமாக்கியுள்ளது. இதனை ஒருங்கிணைந்த திட்டங்களுக்கும் விரிவுபடுத்தலாம்.

- சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மீண்டும் பயன்படுத்த இணைப்பு கொடுக்க இயலும் இடங்களில் எல்லாம் (சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், ஸ்பிக் திட்டங்களுக்கு) கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகளைத் தனியார் மயமாக்குதல்.

- ஊரக மக்களிடையே, பொது ஆதாரங்களைப் பராமரிக்கும் பணி ஒப்படைக்கப் படலாம். வளர்ச்சி நோக்கிலான திட்டமிடல் பணிகள் சிலவற்றிற்குப் பொறுப்பான அண்டைப் பகுதி குழுக்களை ஏற்படுத்துவதில் நகர்ப்பகுதி அடிப்படைப் பணித் திட்டம் வெற்றி பெற்றுள்ளது. இதையே ஊரக மக்களுக்கும் விரிவுபடுத்த வேண்டியது அவசியம்.சிறப்புத் திட்டங்களில், யூனிசெஃப் நிறுவனம் கைப்பம்பு இயக்க பராமரிப்பில் உள்ளூர் மக்களுக்குப் பயிற்சியளித்துள்ளது. இம்முயற்சிகளை மேலும் வலுப்படுத்த வேண்டும்.